# கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்

அசல் வழக்கு எண். 388/2012

நாள்: 25.06.2025.

பெயர்: முருகேசன் (பி.வா.சா.1) த/பெ: தம்புசாமி

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

**<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை...</u>**

1) 1 ம் வாதியின் மனைவி தவமணி ஆவார். 2 ம் பிரதிவாதியான சாமிதுரைக்கு தவமணி சகோதரி ஆவார். 2ம் பிரதிவாதியான சாமிதுரை எனது பங்காளி ஆவார், அவர் எனது தந்தையின் நேரடி உறவினர் இல்லை. எனது தாத்தாவின் உறவினரா என்று எனக்கு தெரியாது. எனது தந்தை பெயர் தம்புசாமி. என் தந்தையுடன் பிறந்த மற்றொரு சகோதரர் பெயர் கலியபெருமாள். 2ம் பிரதிவாதியான சாமிதுரையின் தந்தை கோவிந்தசாமி எனக்கு சித்தப்பா முறை வேண்டும். எங்களுக்கும் எனது பங்காளிகளான கோவிந்தசாமி, பெரியசாமி ஆகியோர்களுக்கும் ஒரே இடத்தில் நிலம் உள்ளது.

2) கோவிந்தசாமிக்கும் பெரியசாமிக்கும் பாகத்திற்குப் பிறகு பரிவர்த்தனை செய்து அனுபவித்து வருகிறார்கள் என்றால் எனக்கு தெரியாது. கோவிந்தசாமி படையாட்சிக்கு எங்கெங்கெல்லாம் சொத்துக்கள் உள்ளது என்பது எனக்கு தெரியும். 1ம் வாதியின் மனைவி தவமணியும், 2ம் பிரதிவாதியும் கோவிந்தசாமியின் வாரிசு என்றால் சரிதான். தவமணியும் சாமிதுரையும் வாய்மொழியாக பாகம் பிரித்துவிட்டார்கள் என்றால் எனக்கு தெரியாது. சாமிதுரை தனது சில சொத்துக்களில் 1ம் வாதிக்கு கிரயம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

3) 1ம் வாதியின் மனைவி தவமணிக்கு தனது தந்தை கோவிந்தசாமி வழியாக சொத்து ஒதுங்கி அவரோ அவருக்கு பிறகு வாதிகளோ அனுபவித்து வருகிறார்கள் என்றால் எனக்கு சரியாக தெரியாது. சாமிதுரைக்கும் 1ம் வாதியின் மனைவி தவமணிக்கும் எந்த எந்த சொத்துக்கள் பாகம் ஒதுங்கி அனுபவித்து வருகிறார்கள் என்றால் எனக்கு தெரியாது. தவமணிக்கு பூர்வீக சொத்தில் பாகம் ஒதுங்கியதா இல்லையா என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.நான் கடந்த 27.01.2012ம் தேதியில் தாவா சொத்துக்களை 2,3 பிரதிவாதிகளிடமிருந்து வா.சா.ஆ.2 ன் படி கிரயம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி, வா.சா.ஆ.2 ஆவணத்தில் எங்களுக்கு சொந்தமானதும் பூர்வீக சொந்தமாய் எங்களுக்கு வாய்மொழி மூலம் பாகம்

கிடைக்கப்பெற்றும் என்று கண்டுள்ள வாசகத்தின் விளக்கம் 1ம் வாதியின் மனைவி தவமணிக்கும் 2ம் பிரதிவாதிக்கும் பாகம் பிரிந்ததை குறிக்குமா என்றால் எனக்கு சரியாக தெரியாது. வா.சா.ஆ 2ல் குறிப்பிடப்பட்டுள்ள வாய்மொழி பாகம் எதனைக் குறிக்கிறது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

4) 1ம் வாதியின் மனைவி தவமணிக்கும் 2ம் பிரதிவாதிக்கும் ஏற்பட்டதாக சொல்லும் வாய்மொழி பாகம் குறித்தும் அனுபவம் குறித்தும் 2ம் பிரதிவாதியின் வாரிசுகளை விசாரித்தால்தான் தெரியும் என்றால் சரிதான். 1ம் வாதியின் சொந்த ஊர் காங்கேயன்குறிச்சி ஆகும். 1ம் வாதி தவமணியை திருமணம் செய்த நாள் முதல் தாவா சொத்து அமைந்திருக்கும் கீழக்குடியிருப்பில் குடியிருந்து வருகிறார். 1ம் வாதியின் மனைவி தவமணிக்கு திருமணம் ஏற்பட்ட பிறகுதான் 2ம் பிரதிவாதிக்கு திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். 2ம் பிரதிவாதியின் திருமணத்தின்போது அவருடைய பெற்றோர்கள் உயிருடன் இல்லை, 1ம் வாதிதான் முன்னின்று 2ம் பிரதிவாதியின் திருமணத்தை நடத்தி வைத்தார் என்றால் சரிதான்.

5) 2ம் பிரதிவாதியின் திருமணத்திற்கு பின்பு அவர் 1ம் வாதியின் மனைவியுடன் ஒரே வீட்டில் வசித்து வந்தார்கள் என்றால் இல்லை. 2ம் பிரதிவாதியும் 1ம் வாதியின் மனைவியும் ஒரே மனைக்கட்டில் வெவ்வேறு வீடுகளில் குடியிருந்தார்கள். அந்த வீடுகள் எப்போது கட்டடப்பட்டன என்பது எனக்கு தெரியாது. ஜெயங்கொண்டம் நிலக்கரி ஆர்ஜித சொத்துக்கள் 2ம் பிரதிவாதியின் தாயார் சாரதாம்பாள் பெயரில் கிரயம் பெற்ற சொத்துக்கள் என்றால் எனக்கு தெரியாது.

6) நான் கிரயம் வாங்கிய சொத்துக்களை ஏற்கனவே தவமணி அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் தவமணிக்கு கிடைக்கப்பெற்றதா 2ம் பிரதிவாதிக்கு கிடைக்கப்பெற்றதா என்பதை 2ம் பிரதிவாதியின் வாரிசுகளை கேட்டால்தான் தெரியும் என்றால் சரிதான்.3 மற்றும் 6 முதல் 8 பிரதிவாதிகள் 2ம் பிரதிவாதியின் வாரிசுகள் என்றால் சரிதான்.3 மற்றும் 6 முதல் 8 பிரதிவாதிகள் வழக்கறிஞர் வைத்து இவ்வழக்கில் கட்சி செய்கிறார்களா என்றால் இல்லை. நான் கிரயம் வாங்கி பயிர் வைக்க போனபோது 1ம் வாதி தடுத்தார். அது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் நான் கொடுத்தேனா 1ம் வாதி கொடுத்தாரா என்றால் எனக்கு தெரியாது.அந்த புகார் சம்பந்தமாக காவலர்கள் எங்களை விசாரித்தனர், அதன்பின்பு நீதிமன்றத்தில் வழக்கு போட்டு பார்த்துக்கொள்ளுங்கள் என்று அனுப்பி வைத்தார்கள்.

7) என்னை கிரயத்திற்குப் பிறகு எனது அனுபத்திற்கு 1ம் வாதி எதை வைத்து தடுத்தார் என்று எனக்கு தெரியாது. காவல் நிலைய விசாரணையின் போது 1ம் வாதி என்னை ஏன் தடுத்தார் என்பது பொறுத்து விசாரித்தார்களா என்றால் எனக்கு தெரியாது. கோவிந்தசாமியின் அனைத்து சொத்திற்கும் 2ம் பிரதிவாதி சாமிதுரையின் பெயரில்தான் பட்டா உள்ளது என்றால் சரிதான். எனது பங்காளி வகை சொத்தை வாதிகளிடமிருந்து அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தான் 2,3 பிரதிவாதிகளிடமிருந்து தாவா சொத்துக்களை நான் கிரயம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி குடும்பத்திற்கு சுமார் 5 ஏக்கர் நிலம் இருக்கும் என்றால் எனக்கு தெரியாது. கோவிந்தசாமி நிலத்தில் 2 ஏக்கர் நிலத்தை நிலக்கரி திட்டத்தில் ஆர்ஜிதம் செய்துகொண்டார்களா என்றால் எவ்வளவு நிலம் என்று தெரியாது ஆர்ஜிதம் செய்து தற்போது திருப்பி கொடுத்துவிட்டனர். அவ்வாறு திருப்பி கொடுத்த சொத்தை யார் அனுபவித்து வருகிறார்கள் என்றால் 2ம் பிரதிவாதி சாமிதுரை அனுபவித்து வருகிறார்.

8) தாவா சொத்துக்களை தவமணி உயிருடன் இருந்த காலத்தில் அவர் கீழக்குடியிருப்பு தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் அடமானம் வைத்து கடன் பெற்றிருந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. எனது வா.சா.ஆ.2 ஆவணத்தில் வாய்மொழி பாத்தியமாக கண்டுள்ள வாசகப்படியான சொத்துக்கள் சாமிதுரைக்கு வாய்மொழியாக ஒதுக்கிய சொத்துக்கள் இல்லையென்றாலும் அது தவமணியின் வாய்மொழி பாக சொத்து என்றாலும் சரியல்ல. வாதிகளின் குடும்பம் வெளியூறிலிருந்து வந்து தாவா கிராமத்தில் வசித்து வருவதால் 1ம் வாதியின் மனைவி பாகத்தை அபகரிக்கும் உள்நோக்கத்தில் 2,3 பிரதிவாதிகளிடமிருந்து தாவா சொத்துக்களை கிரயம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. நான் கிரயம் பெற்ற காலம் வரை தாவா சொத்துக்களை வாதிகள் தான் அனுபவித்து வந்தனர் என்றால் சரியல்ல.

9) தாவா சொத்துக்களை தவிர்த்து பிற சொத்துக்களை 2ம் பிரதிவாதி தரப்பில் தான் அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் கிரயம் பெற்ற பிறகு வாதிகளின் தாவா சொத்துக்களின் அனுபவத்தில் நான் இடையூறு செய்ததால்தான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்து விசாரித்தனர் என்றால் சரியல்ல. காவலர்கள் விசாரணையில் தாவா சொத்தில் வழக்கு போட்டு அதில் தீர்வு வரும் வரை அதில் நானோ, வாதிகளோ போகக்கூடாது என்று கூறினார்கள் என்றால் அதைப் பற்றி எனக்கு

தெரியாது. வா.சா.ஆ.2 ல் பெற்ற கிரயம் மோசடியானது என்றால் சரியல்ல. வா.சா.ஆ 2 – ஐ எழுதிக்கொடுக்க 2,3 பிரதிவாதிகளுக்கு எவ்வித உரிமையும் இல்லை, அதனால் வா.சா.ஆ 2 ன் படி எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ 2 ன் படி ஏற்பட்ட பி.வா.சா.ஆ 4 முதல் பி.வா.சா.ஆ 7 வரையான ஆவணங்கள் செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

10) தாவா சொத்துக்கள் 1 ம் வாதியின் மனைவி தவமணிக்கு பாகமாய் பெறப்பட்டு வாதிகள் அனுபவித்து வந்த சொத்து என்றால் சரியல்ல. தாவா சொத்தானது தவமணிக்கு பாத்தியப்பட்டது என்பதால்தான் 2 ம் பிரதிவாதியும் அவரது வாரிசுகளும் சாட்சியம் அளிக்க முன்வரவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தானது வாதிகளுக்கும் 4,5 பிரதிவாதிகளுக்கும் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களைப் பொறுத்து என்னால் ஏற்படுத்திக்கொண்ட வா.சா.ஆ 2 ஆவணம் செல்லாத ஆவணம் என்பதால் ரத்து செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல.தாவாப்படி தீர்ப்பாக வேண்டுமென்றால் சரியல்ல.

ஒப்பம்/–திரு. ம.சி. கண்ணதாசன், எம்.எல்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.